# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 6 வியாழக்கிழமை (23-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 258


# இதுவரை 6 சடலங்கள் ஒதுங்கின

வேலணை, செப். 23

புங்குடுதீவு குறிகாட்டுவானில் நேற்றுப் பிற்பகல் 3.45 மணி அளவில் மற்றும் ஒரு சடலம் கரை ஒதுங்கியதை அடுத்து கடந்த இரண்டு நாள்களில் புங்குடுதீவிலும் நயினாதீவிலும் கரை ஒதுங்கிய சடலங்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் குறிகாட்டுவானிலும் குறிகாட்டுவானுக்கு சமீபமாக உள்ள புளியடித்துறையிலும் நான்கு சடலங்கள் கரை ஒதுங்கி இருந்தன. அவற்றில் இரண்டு பெண்களின் சடலங்கள் ஒன்று ஆணின் சடலம் மற்றது இரண்டரை வயது சிறுவனின் சடலம்.

சிறுவனின் சடலம் புளியடித்துறையில் கரைஒதுங்கியது.

நேற்று முன்தினம் நயினாதீவில் கரை ஒதுங்கிய பெண்ணின் சடலத்துடன் 6 சடலங்கள் கரை ஒதுங்கி உள்ளன.

நேற்று பிற்பகல் குறிகாட்டுவான் பகுதியில் கரை ஒதுங்கிய சடலம் பச்சை நிற டெனிம் காற்சட்டையும் நீல நிற ரீ சேர்ட்டும் அணிந்த நிலையில் காணப்பட்டது. 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் இது.

நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய 5 சடலங்களும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி ச. இளங்கோவனின் உத்தரவின்படி அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்களினால் அடக்கம் செய்யப்பட்டன.

குறிகாட்டுவானில் கரை ஒதுங்கிய இரு பெண்களின் சடலங்களில் ஒன்று 50 வயது மதிக்கத்தக்க ஒருவருடையது.

இச்சடலத்தின் கழுத்தில் தாலிக்கொடி மற்றும் சிங்கப்பூர் முறுக்குச் சங்கிலி என்பன காணப்பட்டன. உள்பாவாடை மட்டும் அணிந்திருக்கக் காணப்பட்ட இந்தச் சடலத்தின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சுற்றிவளைப்பு

திருமலை, செப். 23

திருகோணமலை நகர சந்தைப் பகுதி நேற்று படையினரால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டுத் தீவிர தேடுதல்கள் இடம்பெற்றன.

சந்தைக்குப் பொருள்கள் வாங்குவதற்காகச் சென்ற அனைவரது அடையாள அட்டைகளும் சோதனையிடப்பட்டதுடன் அவர்களது பொருள்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

விடுதலைப்புலிகள் ஊடுருவி உள்ளார்கள் என்று கிடைத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் பெண்ணின் சடலம்

கரைஒதுங்கிய சடலங்களில் ஒன்று நேற்று முன்தினம் யாழ். பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த இராமுப்பிள்ளை சின்னையா என்று சடலம் அடையாளம் காணப்பட்டது.

இவர் வன்னியில் இருந்து வந்த போது சடலமாக ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் வந்த படகு விபத்துக்கு உள்ளாகி இருக்கலாம்என்று நம்பப்படுகிறது (15)

# புதைகுழிகள் தோண்டும் பணி நேற்றுடன் பூர்த்தி

## நிபுணர் குழு டிசெ. 6 இல் அறிக்கை சமர்ப்பிக்கும்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23

செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் கிருஷாந்தி கொலை வழக்குக் குற்றவாளிகள் ஐவரும் காட்டிய 25 புதைகுழிகளையும் தோண்டும்பணிகள் நேற்றுப்பிற்பகல் பூர்த்தி அடைந்தன.

இந்தப்பணிகள் தொடர்பான விரிவான அறிக்கையை புதைகுழி தோண்டும் பணிகளில் ஈடுபட்ட நிபுணர் குழு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

செம்மணியில் நேற்று மாலை 4 மணிக்கு தளநீதிமன்றம் யாழ் மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் கூடியது.

இந்த விசாரணை வெற்றிகரமாக இடம்பெற உதவிய சகல தரப்பினருக்கும் நீதிவான் எம். இளஞ்செழியன்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## புதைகுழி தோண்டுவோர் வேலைநிறுத்தம்!

கொழும்புத்துறை இராணுவ முகாமுக்கு பின்புறமாக உள்ள புதைகுழிகளைத் தோண்டும்பணி நேற்று ஆரம்பமான சமயம் அந்தப்பணியில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தெற்கில் இருந்து விசேடமாக அழைத்துவரப்பட்டிருந்த 20க்கு மேற்பட்ட தொழிலாளர்களே இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தினமும் 500 ரூபா சம்பளம் வழங்குவதாகத் தெரிவித்துதாம் இங்குஅழைத்து வரப்பட்டிருந்ததாகவும்—

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நீர்கொழும்பில் நேற்று பஸ்களில் குண்டுவெடிப்பு

### 23 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, செப். 23

நீர்கொழும்பு, குளியாப்பிட்டி ஆகிய இடங்களில் நேற்று ஒரே நேரத்தில் இடம்பெற்ற வெவ்வேறு பஸ் குண்டுவெடிப்புச் சம்பவங்களின் போது 23பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் நீர்கொழும்பு பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றிலேயே முதலாவது குண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பின் போது 3 பேர் படுகாயமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து குளியாப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த மத்திய போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான பஸ்ஸில் இரண்டாவது குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை ஈ. பி. டி. பி. அமைப்பு கைவிட்டது!

யாழ்ப்பாணம், செப். 23

யாழ். குடாநாட்டு மக்களின் நிவாரண வெட்டு உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து ஈ. பி. டி. பி. அமைப்பு கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வந்த நாடாளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

இது தொடர்பாக ஈ. பி. டி. பி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ இராணுவக் கட்டுப்பாடு இல்லாத வன்னிப் பிரதேசத்துக்கு உணவு மற்றும் மருந்து எரிபொருள் என்பவற்றை உடன் அனுப்ப வேண்டும்.

★ யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த 86 ஆயிரம் குடும்பங்களுக்கும் இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## போரைதீவிரமாக்கக்கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### புலிகளுக்கு எதிராகக் கோஷம்

கொழும்பு செப் 23

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான யுத்தத்தை தீவிரமாக்க வேண்டும் எனவும்—

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் அரசு ஈடுபடக் கூடாது எனவும் — கோரி கொழும்பில் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. பிக்குமார் உட்பட சுமார் 200 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

'வீரவிதான' அமைப்பு, பயங்கரவாதத்துக்கு எதி

(10 ஆம் பக்கம் பார்க்க)



போர்க்கோஷம் எழுப்புவோரைப் பிடித்துப் போர் முனைக்கு அனுப்ப வேண்டும் பாருங்கோ—!

## 20 க்கு மேற்பட்ட படையினரை உடன் விசாரிக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 23

செம்மணி மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் பொது மக்கள் கைதாகிப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான முன்னாள் சிப்பாய்கள் தமது வாக்கு மூலங்களில் குறிப்பிட்ட 20 க்கு மேற்பட்ட படையினர் மீதான விசாரணைகளை உடன் ஆரம்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

கொலைகளுக்கு காரணமாக இருந்தவர்கள், கொலைகளைச் செய்தவர்கள், சடலங்களை எடுத்துச் சென்றோர், சடலங்களை புதைக்க உதவியோர் என வகைப்படுத்தி அவர்களை விசாரிக்க வேண்டும் என்றும்—

சரியான இடத்திலா புதை குழிகள் தோண்டப்பட்டன? அல்லது வேறு எங்கேயாவது புதைகுழிகள் உள்ளனவா? என்பன குறித்தும் அவர்களிடம் விசாரிக்க வேண்டும் என்றும் — நீதிவான் உத்தரவிட்டார். (இ-3-6)

## புலிகள் பிரமுகர்களுடன் ஆயர்கள் சந்திப்பு

கொழும்பு, செப். 23

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ள யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்ட கத்தோலிக்க ஆயர்கள் அங்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினர் என்று தெரியவருகின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொது அறிவுத் தேர்வில் சித்தி பல்கலை அனுமதிக்கு அவசியம்

## 2 ஆயிரமாம் ஆண்டு முதல் அமுலுக்கு

கொழும்பு, செப். 23

எதிர்வரும் 2 ஆயிரம் ஆண்டு முதல் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையுடன் நடத்தப்படும் பொது அறிவுத் தேர்வில் அனைவரும் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும். சித்தியடையத் தவறுவோர் பல்கலைக்கழக அனுமதியை இழப்பர்.

கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன இவ்வாறு தெரிவித்தார். உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பொது அறிவுப் பரீட்சை கடினமான ஒன்றல்ல, பரீட்சார்த்தமாக 2 ஆயிரத்து 80 பாடசாலைகளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட இப் பரீட்சையில் தோற்றியோரில் 78 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 2 ஆயிரம் ஆண்டு நடைபெறும் உயர்தரப் பரீட்சைக்கான ஆகக் குறைந்த புள்ளி 135 ஆக இருக்கும் மாவட்ட கோட்டா முறை ரத்துச் செய்யப்படும்.

இவ்வாறு அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

### போரை...

[முதலாம் பக்கத் தொடர்]

ரான அமைப்பு, பௌத்த இளைஞர் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

''இனிமேல் சமாதானம் தியானம் வேண்டாம்''. 'சிங்களவரின் இரத்தத்தில் போலி ஈழம்', கொலைகார புலிகளை அழித்தொழி'' ஆகிய பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர்.

(இ-6-8-9)

எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

- பாதாள பைரவி
- தங்கை
- தியாகி
- பெரிய இடத்துப்பெண்
- தர்மம் தலைகாக்கும்

பிரமிட் CD வெளியீடுகள்!

- படையப்பா
- தேவி

★ புதிய போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/9045)

இன்றைய ஓடியோ CD வெளியீடு!

- ஆசையில் ஓர் கடிதம்
- அன்புள்ள டயானா

மூர்த்தி வீடியோ சென்ரர்
மானிப்பாய்.
T. P. No. - 2884
(சி/9043)

பரீட்சைகள்
8 MS

மேற்படி பிரிவுக்கான பரீட்சைகள் திட்டமிட்ட நேர அட்டவணையின் பிரகாரம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறும் என்பதனை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- இயக்குநர்
(சி/9041)

### நாடாளுமன்றப்...

[முதலாம் பக்கத் தொடர்]

களுக்கும் மீண்டும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ யாழ். மீனவர்கள் சாரம் அணிந்து மீன் பிடிக்கச் செல்வதற்கான தடை நீக்கப்பட வேண்டும், மீன் பிடி எல்லை விஸ்தரிக்கப்பட வேண்டும்.

★ யாழ்ப்பாணத்துக்கான சீரான போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதுடன் கெடுபிடிகள் அற்ற முறையில் பயணம் செய்யும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்ட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த இரு மாதங்களாக நாம் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்தோம்.

எமது கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகளுக்கு ஏற்கனவே தீர்வு காணப்பட்டு விட்டன.

போக்குவரத்து நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் அண்மையில் பேச்சு நடத்தினோம்.

அதன்போது குடாநாட்டு மக்களின் போக்குவரத்து நெருக்கடிகளை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

வடபகுதிக்கான கப்பல் சேவையை நடத்துவதற்கு விரைவான ஒழுங்குகள் செய்வதாகவும் —

ஜனாதிபதி உறுதியளித்தார்.

எமது மூன்று கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாலும் நான்காவது கோரிக்கைக்குத் தீர்வு காணும் உத்தரவாதம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டதாலும் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவது என எமது அமைப்பு முடிவு செய்துள்ளது.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

### புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்)

தற்சமயம் தமக்கு உணவு மற்றும் இருப்பிடச்செலவுக்கு என்று தெரிவித்து கொடுப்பனவை வெட்டிவிட்டு 100 ரூபா மட்டும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் — அவர்கள் தெரிவித்தனர்.

இதனைக்கண்டித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

நான்கு மணி நேரம் இடம்பெற்ற இந்தப் போராட்டம் காரணமாக தோண்டும் பணிகள் தடைப்பட்டன.

பின்னர் அவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பணிகள் தொடர்ந்து இடம்பெற்றன.

[இ-3-6)

### புதைகுழிகள்...

[முதலாம் பக்கத் தொடர்]

சட்டமா அதிபர் திணைக்கள சட்டவாதி யசந்த கோத்தாக்கொட, சட்டமருத்துவத் துறை நிபுணர் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல ஆகியோர் நன்றி கூறினர்.

அங்கு நீதிவான் தெரிவித்ததாவது:-

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நூறு சதவீதம் வெற்றிகரமாக அமைந்தன என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீதியின் பேரில் இடம்பெற்ற இந்த விசாரணை யாழ்ப்பாண பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியுள்ளதுடன் மக்களின் மனத்தையும் வென்றுள்ளது.

இலங்கையில் சூரியகந்தவில் புதைகுழிகள் தோண்டப்பட்டன. சர்வதேச பார்வையாளர்கள் இன்றி அந்தப்பணி இடம்பெற்றது.

இலங்கையில் சர்வதேச பார்வையாளரின் பிரசன்னத்தில் முதல் தடவையாக விஞ்ஞான ரீதியில் இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்த விசாரணை மூலம் யாழ்ப்பாணத்தில் நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. நீதியின் பால் மக்களுக்கு நம்பிக்கை வந்துள்ளது; நீதித்துறை அவர்களின் மனதை வென்றுள்ளது. செம்மணி விசாரணை மூலம் இந்த மூன்று விடயங்களும் எட்டப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளை நடத்தமுன்புஇருநீதிவான்கள் மறுத்த நிலையில் என்னிடம் இந்த விசாரணைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்த விசாரணை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவிய சகலருக்கும் நன்றி கூறுகிறேன் — என்றார்.

இந்த விசாரணைகளின் போது மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் தடயப் பொருள்களை ஆய்வு செய்ய கால அவகாசம் தேவை என நிபுணரான நெரியல்ல விண்ணப்பித்தார்.

இதனை அடுத்தே டிசெம்பர் 6 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கநீதிவான் அனுமதி வழங்கினார்.

நீதிமன்றம் கூடுவதற்கு முன் கொழும்புத்துறை இராணுவ முகாமுக்கு பின்புறமாக அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் தோண்டும் பணிகள் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றன.

எனினும் அங்கிருந்து எலும்புக் கூடுகளோ எச்சங்களோ மீட்கப்படவில்லை என்று தோண்டும் பணியில் ஈடுபட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து செம்மணி உப்பளப் பகுதியில் 20 பேர் வரை புதைக்கப்பட்டதாக அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் புல்டோசர் கொண்டு தோண்டும் பணி இடம்பெற்றது.

தோண்டும் பணிகளைப் பார்வையிடுவதற்காக வந்துள்ள சர்வதேச நிபுணரான செல்வி மெலியா கோணேர்ஸ் கேட்டுக் கொண்டதை அடுத்து இந்தத் தோண்டும் பணி இடம்பெற்றது.

அத்துடன் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் தோண்டும் பணிகள் அனைத்தும் பூர்த்தி அடைந்தன.

(இ-3-6)

### தராசுகளுக்கு முத்திரை

கொழும்புத்துறை, செப். 23

வட்டுக்கோட்டை பிரதேச சபை செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1. 30 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும்பணி நடைபெறும். (இ-30)

### நீர்கொழும்பில்..

(முதலாம் பக்கத் தொடர்)

போது 20 பேர் காயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் நீர்கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கள் சம்பந்தமாகப் பொலீஸார் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(இ-9)

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தகவலின் பேரிலேயே இந்தத் தேடுதல்கள் இடம்பெற்றன என்று படையினர் தெரிவித்தனர்.

இதே வேளை — திருகோணமலை நகரப் பகுதியிலும் புதிய வீதிச் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு தீவிர சோதனைகள் இடம்பெற்று வருவதுடன் நகரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

(இ-6)

### பெர்னாண்டஸ் எச்சரிக்கை

புதுடில்லி, செப். 23

பீஹார் முதலமைச்சர் ராப்ரிதேவி மீது வழக்குத் தொடரப் போவதாக ஜோர்ச் பெர்னாண்டஸ் எச்சரித்துள்ளார்.

ஐக்கிய ஜனதாள் தன் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ராம் விலாஸ் பாஸ்வானை கல்லால் அடிக்குமாறு ராப்ரிதேவி கூறியதைத் தொடர்ந்தே பெர்னாண்டஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கைப்பூர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ராஜ் படேல் என்ற ஊரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது ராம் விலார் பாஸ்வான் இங்கு வந்தால் கல்லால் அடித்து அனுப்புங்கள் என்றும் ராப்ரிதேவி தெரிவித்திருந்தார்.

### மட்டுநகரில் தேடுதல்

மட்டக்களப்பு. செப். 23

மட்டக்களப்பு நகரப் பகுதி நேற்று மாலை படையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டுப் பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப் பட்டது.

தேடுதலின் போது படையினரால் விசாரணைக்கெனப் பெண் ஒருவர் உட்பட 6 பேர் அழைத்துச் செல்லப்பட்டனர் என மட்டக்களப்பு செஒதிகள் தெரிவித்தன.

(உ-7-21)

### இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்)

கழுத்தில் கைப்பை ஒன்றும் காணப்பட்டது. அந்தக் கைப்பையினுள் கடிதம் ஒன்றும் இருந்தது. 'கே. மாணிக்கவாசகர் இல. 92. கண்டி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியிலிருந்து 'கே. பூமணி சிவனேஸ்வரி ஸ்டோர்ஸ் 13 ஆம் கட்டை, விசுவமடு' என்ற முகவரிக்கு எழுதப்பட்ட கடிதம் அது.

மேலும் அந்தக் கைப்பைக்குள் இருந்த டயறியில் கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் பலருடைய விலாசங்களும், தொலைபேசி இலக்கங்களும் காணப்பட்டன.

இதே இடத்தில் கரை ஒதுங்கிய ஆணின் சடலம் 40 வயது மதிக்கத்தக்க ஒருவருடையது.

இந்தச் சடலத்தில் நெற் பெனியன், ஊதா நிற முழுக்கை சேர்ட், பச்சை நிற அரைக் காற்சட்டை, நீல நிற பச்சைக் கோடிட்ட சாரம் போன்றன காணப்பட்டன. அத்துடன் இடது கையில் கஸியோ ரக மணிக்கூடும் காணப்பட்டது.

சடலத்தின் இடுப்பு பகுதியில் நீல நிற நைலோன் கயிற்றினால் கட்டப்பட்ட பிளாஸ்ரிக் கான் இருந்ததுடன் கழுத்தில் எஸ் அடையாளமிடப்பட்ட சிங்கப்பூர் முறுக்குச் சங்கிலியும் கைவிரலில் 'ரி. ரி.' என்ற ஆங்கில எழுத்து பொறிக்கப்பட்ட மோதிரத்துடன் மேலும் ஒரு மோதிரமும் காணப்பட்டன.

குறிகாட்டுவானில் நேற்று முன்தினம் கரையொதுங்கிய மற்றைய பெண்ணின் சடலம் 30 வயது மதிக்கத்தக்க ஒருவருடையது. சடலத்தில் தாலிக்கொடி. தாலி போன்றவை காணப்பட்டன.

கறுப்பு நிறத்தில் வெள்ளைப் பூப்போட்ட அரைப் பாவாடையுடன் காணப்பட்ட இந்தச் சடலத்தின் காதுகளில் வெள்ளை, சிவப்பு நிறக் கல்பதித்த தோடு காணப்பட்டது.

இச் சடலம் கரையொதுங்கிய இடத்திலிருந்து 15 அடி தூரத்தில் கறுப்பு நிற பை ஒன்று காணப்பட்டது அந்த பைக்குள் ஆயிரம் ரூபா காசும் பற்றுச்சீட்டு ஒன்றும் இருந்தன.

இந்தப் பற்றுச் சீட்டு 'ஐ. அம்பிகை மலர் மே/பா பூ. பொன்னு இல. 22, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு' என்ற முகவரி காணப்பட்டது.

புளியடித்துறையில் கரையொதுங்கிய இரண்டரைவயது மதிக்கக் கூடிய சிறுவனின் சடலம் இளம் பச்சை நிற யங்கி மற்றும் ரீசேர்ட் அணிந்த நிலையில் காணப்பட்டது.

நயினாதீவில் நேற்று முன்தினம் நிர்வாணமாக கரையொதுங்கிய 46 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலத்தில் சங்கிலி, காப்பு, மோதிரம் போன்றவை காணப்பட்டன.

நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய ஐந்து சடலங்களும் ஊதிப்பருத்து அடையாளம் காணமுடியாத நிலையில் காணப்பட்டன.

இச் சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட சுமார் 20 பவுண் மதிப்புடைய நகைகள் ஊர்காவற்றுறை பொலீஸாரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இ-167-5)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

யுத்தத்தை நிறுத்தி அரசுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆயர்கள் புலிகளின் பிரமுகர்களுடன் உரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கிபிர் தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த பகுதிகளையும் தாக்குதலில் காயமடைந்தவர்களையும் ஆயர்கள் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டனர் என்பது தெரிந்ததே.

(இ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 09 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் துரைராஜா

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் வண்ணை நாச்சிமார்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் துரைராஜா 22-9-99 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் குணமணி அவர்களின் அன்புக் கணவரும் சூரியகலா, கமலராணி, ஜெயக்குமார்(கொழும்பு), சசிகுமார், சகுந்தலா, உதயகுமார் (அகிலன்), விஜிக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகநாதன் (கிளி), தவராஜா, நந்தினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பரிமளரெத்தினம் அவர்களின் மருமகனும் தயானந்தன், மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று 23-9-99 பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. சசிகுமார்
(மகன்)

கே.கே. எஸ்.றோட்,
நாச்சிமார் கோயிலடி.

(69308)

## இராமுப்பிள்ளை சின்னத்தம்பி

(முன்னாள் உரிமையாளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், கடவத்தை)

பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் கருங்காலியை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்தவருமாகிய இராமுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 21-09-99 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை — பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னம்பலம்—தங்கமுத்து அவர்களின் மருமகனும் அன்னம்மாவின் அன்புக்கணவரும் ரோகினி (மல்லாவி), சறோஜினி (சுவிஸ்), லிங்கேஸ்வரன் (ஜேர்மனி), தனலக்ஷ்மி (சுவிஸ்), கமலாதேவி (விஸ்வமடு), தவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசம்பந்தன், செல்வரத்தினம், அனுசியா, விசயானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் மாமனாரும் காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம், சங்கரப்பிள்ளை, சோமசுந்தரம், இராசையா, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதியின் மைத்துனரும் நிர்மலன், நமலன், மனோகாந்தன், தவப்பிரியா, ரஜீவன், செந்தா, சிந்துஜா, சர்மிளா, விஜியதனா, விதுர்சன், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-09-99) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு (இ. நே) அவரது இல்லத்தில் (காரைநகர்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஐயனார் கோயிலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. அன்னம்மா
(மனைவி)

கருங்காலி,
காரைநகர்.

(69291)

### சுன்னாகம் சூராவத்தை
## திருமதி கணேசு சரஸ்வதி

சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கணேசு சரஸ்வதி அவர்கள் நேற்று 21-9-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கணேசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், சிவபாதசுந்தரம் (உரிமையாளர், பேரம்பலம் மதுபானசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்), செல்வராஜா, இந்திராணி (ஜேர்மனி), மகேந்திரன் (மட்டக்களப்பு), இராஜேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான நாகமணி — பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னையா — பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லம்மா, கந்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), குணரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் விஜயலக்சுமி, சிவனேஸ்வரி, இராஜதுரை (ஜேர்மனி), இன்பராணி (மட்டக்களப்பு), லதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்ற இராசரத்தினம், சொர்ணலட்சுமி, மகேஸ்வரி, சரஸ்வதி (ராஜா கிறீம் ஹவுஸ்), மகேஸ்வரி, மாசிலாமணி (லண்டன்), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மீராஜினி, திபாகினி, சுபாஜினி, பிரசாந்த், கபிலன், சுஜீபன், கோபினா, கோகுலன், பபீனா, தர்ஷன், மயூரி, நிரோஜனன், வர்ஷனா, சிந்துஜன், திசான், கஸ்ரீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-9-99) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல 1010/30, கே. கே. எஸ். வீதி, தலையாழி லேனில் உள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
க. சிவபாதசுந்தரம் (மகன்)
(உரிமையாளர், பேரம்பலம் மதுபானசாலை, யாழ்ப்பாணம்)

இல. 1010/30, கே. கே. எஸ். வீதி,
தலையாழி லேன்,
யாழ்ப்பாணம்.

(6930[illegible])

## பரிசளிப்புவிழா

சுதுமலை, செப். 23

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழன் நடைபெறவுள்ளது.

(இ-139)

## கலை இலக்கியச் சந்திப்பு

நல்லூர், செப். 23

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் கலை இலக்கியச் சந்திப்பு ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் சந்தியில் உள்ள தனது மண்டபத்தில் நடத்தவுள்ளது.

குடாநாட்டின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படும். நிகழ்வுக்குச் செம்பியன் செல்வன் தலைமை வகிப்பார் வடக்கு — கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, விளையாட்டுத் துறைச் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவுடன் இச் சந்திப்பு இடம்பெறும்.

(அ-51-111)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கு இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு பௌதிகத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபன இரசாயனப்பகுப்புப் பகுதி முகாமையாளர் கே. எஸ். சிறில் 'பெற்றோலிய மசகு எண்ணெயும் அதன் உற்பத்திகளும்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (ஐ)

## தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு இன்று வியாழக்கிழமை முதல் மூன்றுநாள்களுக்கு தொடர்ச்சியாக நடைபெற உள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ள இப்பயிற்சி வகுப்பு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறும். (இ-13)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
சரத்குமார் – கனகா
கவுண்டமணி நடித்த
**சாமுண்டி**
நாளை முதல்
**செங்கோட்டை**
காட்சிகள்: 10-30, 2–30
(69290)

**ராஜா**
யாழ்ப்பாணம்
மீண்டும் சில தினங்களுக்கு
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
**மறுமலர்ச்சி**
10-30, 2–30
(சி/9016)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
சரத்குமார் – வினித்தா
சுகன்யா – கவுண்டமணி
நடித்த
**மகாபிரபு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
([illegible])


உ
ஓம் கணபதி போற்றி

அல்வாய் வடக்கு, மாணிக்கம் பற்றை

## பூதவராயர் திருக்கோயில்

(மாணிக்க விநாயகர்)

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

200 வருடங்களுக்கு மேல் பழைமையுடன் தான் தோன்றீஸ்வரராக வீற்றிருக்கும் மாணிக்க விநாயகனுக்கும் புதிதாய் அமைந்த திருமுருகனுக்கும் வைரவருக்கும் சென்ற 13-09-99 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகக் கிரியைகள் நடைபெறுகின்றன.

**எதிர்வரும் 26-09-99-ல் எம்பெருமானுக்கு மகாசங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.**

திருக்கோயிலின் வாயிலில் உள்ள ஆலமரத்தில் ஆனைமுக உருவம் ஒன்று தோன்றியுள்ளது. பக்த கோடிகள் தொடர்ந்து வந்து அப்பெருமானைப் பார்த்து அவன் அருளைப் பெற்ற வண்ணம் உள்ளனர்.

அந்த மாணிக்க விநாயகனிடம் உங்கள் குறைகளைச் சொல்லி வணங்கி அவரின் அருள் பெறுவீர்களாக!

பிரதமகுரு: சிவஞானதிலகம், பிரதிஷ்டாதிலகம், சிவப்பிரம்மஸ்ரீ
**சோ. இராமநாதக்குருக்கள் சபேசக்குருக்கள்**
சிவன்கோயிலடி, பருத்தித்துறை.

பக்த அடியார்கள் தங்களால் இயன்ற நிதியுதவியும் மற்றும் அபிஷேகத்துக்குரிய பால், இளநீர், புஷ்பம் போன்றவற்றையும் தந்துதவும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

- ஐங்கரன் அடியார்கள்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி/ 9034)

உ
சிவமயம்

## கடையிற் சுவாமிகள் 107 ஆவது குருபூசை

இடம்:- கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயம்
காலம்:- 25-09-99 சனிக்கிழமை

காலை 10. 00 மணிக்கு குருபூசை
மதியம் 12. 00 மணிக்கு மகேஸ்வர பூசை

அனைவரையும் கலந்து கொண்டு கடையிற் குருநாதனின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

(69306) – பரிபாலன சபை

## பதவிகள் வெற்றிடம்

### யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

எமக்கு நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கும் உதயன் பத்திரிகை மேற்பார்த்து விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் முன்னர் அறிவித்த திகதியில் நேர்முகப் பரீட்சையை நடத்த முடியவில்லை என்பதை அறியத்தருகிறோம்.

சகல தரங்களுக்குமான நேர்முகப் பரீட்சைகளும் இம் மாதம் 29 ஆம் திகதி பி. ப 2. 00 மணிக்கும்– 6. 00 மணிக்கு இடையில்

**190, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

விளம்பரதாரர்
த. பெ. இல. 1932, கொழும்பு.

(சி/9039)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் வேலாயுதர்

22-09-99 அன்று காலமான ஆறுமுகம் வேலாயுதர் அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

சுப்பிரமணியம் குடும்பம் (கைதடி),
திருமதி கனகாம்பிகை சண்முகநாதன் குடும்பம் (புத்தூர்),
முரளிதரன் குடும்பம் (புத்தூர்).

(சி/9042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியா எங்கும்

# ஊழல் ஜனநாயகம்

## ஐ. நா. அறிக்கை சாடுகிறது

டாக்கா. செப். 23

தென்னாசிய நாடுகளில் ஊழல்கள் மலிந்து வருவதால் அங்கு ஜனநாயகம் சிதைவுற்று வருவதாகக் கடந்த ஞாயிறன்று வெளியிடப்பட்ட ஐ. நா. அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இப் பிராந்தியத்ல் ஜனநாயகம் ஓரடி முன்னேறுகின்றபோது இரண்டு அடி பின்வாங்கும் நிலை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டாக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மஹாப் உல்—ஹக் மனித அபிவிருத்தி நிலையத்தால் தயாரிக்கப்பட்டு வெளிபிடப்பட்டது.

(ஐ)

# கெனரிதீவில் விசில் அடிப்பது கட்டாய பாடமாகின்றது

மட்ரிட், செப். 23

ஸ்பெயின் நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கெனரி தீவுகளில் விசில் அடிப்பது கட்டாய பாடமாக்கப்படுகிறது.

ஏழு தீவுகளைக் கொண்ட கெனரி தீவுகளில் வசிப்போர் விசில் அடிப்பதில் பரம்பரை பரம்பரையாகத் தேர்ச்சி பெற்றிருந்தனர். இது பெண்களைப் பார்த்து இளைஞர்கள் அடிக்கும் கேலியான விசில் அல்ல. ஆள் அரவமற்ற வனாந்தரத்தில் ஆடு, மாடுகளை மேய்ப்பவர்கள், விவசாயம் செய்பவர்கள், வாகனங்களைச் செலுத்துவோர், தேன் சேகரிப்போர், யாத்திரிகர்கள் ஆகியோர் தொலைவில் கண்ணுக்குத் தென்படாமல் இருக்கும் இன்னொருவருக்குத் தகவல் தெரிவிப்பதற்குப் பயன்படுத்தும் சீட்டிதான் அது.

பிறப்பு, இறப்பு, திருமணம், திருட்டு, கொலை, வழிப்பறி வேட்டை, ஆபத்து, உதவி என்று எல்லாவற்றுக்கும் விதம் விதமாகச் சீட்டி அடிப்பார்கள். தீவில் உள்ள அனைவருமே அதைப் பொதுவான மொழியாகத் தெரிந்து வைத்துள்ளதால் எந்தச் சீட்டி எதற்கு என்று தெரிந்துகொண்டார்கள்.

தற்போது தொலைபேசி உட்பட இதர நவீன தொடர்பு வசதிகள் வந்துவிட்டதால் புதிய தலைமுறையினருக்குச் சீட்டி அடிக்கத் தெரியவில்லை. இனிப் புதிய பாடத்திட்டத்தின்படி ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12 வயது வரையான குழந்தைகளுக்கு வாரத்தில் ஒருநாள் சீட்டி அடிக்கப் பயிற்சி கொடுப்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

[ஐ]

## தென்னாபிரிக்க தமிழ்ப் பத்திரிகை

ஜோகனர்ஸ்பேர்க், செப்,23

தென்னாபிரிக்காவில் தமிழ் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் கலாசாரத்தைப் பேணவும், தமிழர்களை ஒருங்கிணைக்கவும், 'தமிழ் கார்டியன்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகை நிறுவனத் தலைவர் எஸ். பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

பன்னிரண்டு பக்கங்கள் கொண்ட இப் பத்திரிகையில் தென்னாபிரிக்க தமிழ்ச் சமுதாய செய்திகளும், உலகச் செய்திகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-8)

## உலக அரங்கில்

## இஸ்லாமியத் தலைவர்கள் மறுப்பு

கிழக்குத் திமோரில் வந்து இறங்கியுள்ள ஐ. நா. சமாதானப் படையினருக்கு எதிராக புனித ஜிகாத் போரைத் தொடுக்குமாறு அங்குள்ள இஸ்லாமிய மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை கிழக்குத் திமோர் இஸ்லாமிய சமூகத்தின் தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

திமோரின் பெரிய இஸ்லாமிய அமைப்பின் உதவிச் செயலாளரான அறிபின் ஜுனைடி ஐ. நா. சமாதானப் படையைத் தாங்கள் வரவேற்று அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதாகத் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தாய்வானில் புதிய நில நடுக்கங்கள்

## பலியானோர் தொகை 1,700 ஆக உயர்வு

தாய்பேய், செப்ரெம்பர்,23

தாய்வானில் கடந்த திங்களன்று ஏற்பட்ட பெரும் பூகம்பத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் நில நடுக்கங்கள் இடம்பெற்றிருபபதாக அறிவிக்கப்படுகிறது. இதனால் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில் இந்தப் பூகம்பத்தில் பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்து 700 ஆக அதிகரித்துள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்டெடுக்கும் பணியில் இராணுவமும் பொலீஸாரும் முனைப்புடன் செயல்படுகின்றன. புல்டோசர் மற்றும் ஹெலிக்கொப்ரரின் உதவியுடன் இடிபாடுகளில் சிக்கியிருக்கும் சுமார் 3 ஆயிரம் மக்களை மீட்கும் முயற்சி நடைபெறுகின்றது.

உயிர் பிழைத்தவர்களை விட அதிக சடலங்களையே மீட்புப்பணியாளர்கள் கண்டு பிடித்து வருகின்றனர்.

தாய்வானின் மத்திய பாகங்களிலேயே சேதம் மோசமாக உள்ளது. அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் தமது மீட்புப் பணி அணிகளை தாய்பேய்க்கு அனுப்பிவைத்துள்ளன. தாய்வானுக்கு உரிமை கோரி வரும் சீனாவும் பகைமையை மறந்து பாதிக்கப்பட்ட தாய்வான் மக்களுக்கு உதவ முன் வந்துள்ளது.

[ஐ-க]

## ரசிகை தற்கொலை

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின்டெண்டுல்கரின் ரசிகை ஒருவர் தனக்குத்தானே தீமூட்டிக் கொண்டு தற்கொலை செய்துள்ளார்.

சச்சினின் முதுகில் ஏற்பட்ட காயம் அவரது விளையாட்டு முயற்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும் என்று வெளியான தகவல்களை அறிந்து அதிர்ச்சி யடைந்த மைசூரைச் சேர்ந்த 18 வயதான கீதா வசந்த லஷ்மி என்றவரே தற்கொலை புரிந்துள்ளார்.

### அடுத்த ஆண்டு முற்பகுதியில்

# 3 ஆம் உலகப்போரை பாகிஸ்தான் ஆரம்பிக்கும்?

## பிரபல சோதிடர் ஆருடம்

மும்பாய், செப். 23

இந்தியாவில் தேர்தல்களுக்குப்பின்னர் மீண்டும் தொங்கு நாடாளுமன்றமே அமையும் என்றும் எனினும் பிரதமர் பதவியில் அடல்பிஹாரி வாஜ்பாய் தொடர்ந்து நீடிப்பார்.

பிரபல சோதிடர் சவித்தா தக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார். மும்பாயில் நடைபெறும் உலக சோதிட ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்ட சமயம் அவர் இவ்வாறு ஆருடம் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கும் மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் 3 ஆம் உலகயுத்தத்தை பாகிஸ்தான் ஆரம்பிக்கும் என்றும் —

சீனா அதற்கு ஆதரவு அளிக்கும் என்றும் — சவித்தா தாக்கர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## இந்தியா யோசனை தெரிவிப்பு

புதுடில்லி, செப். 23

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக வெளியுறவுச் செயலர்கள் நிலையில் பேச்சு நடத்தலாம் என்ற பாகிஸ்தானின் யோசனை ஐ நா. சபையில் தெரிவக்கப்பட்டால் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இவ்வாறு அமையும் பேச்சுக்கள் ஆக்க பூர்வமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும் எனவும் இந்தியா மேலும் கூறியுள்ளது.

(ஐ-க)

# குழந்தைகள் நலனுக்கு நிதி திரட்ட மிக நீண்ட ஓவியம்

## டுபாயில் வரைய முயற்சி

டுபாய், செப். 23

போரினால் துன்பப்படும் சிறுவர்களின் மறுவாழ்வுக்கு நிதி திரட்ட மிக நீண்ட ஓவியம் ஒன்றை வரைய ''எல்லை கடந்த மருத்துவ உதவி' (எம். எஸ். எவ்) என்ற அமைப்பு தீர்மானித்துள்ளது,

போரினாலும் இயற்கைச் சீற்றங்களினாலும் பாதிப்படைந்த குழநதைகள் புது வாழ்வு பெற இந்த ஓவிய விற்பனையிலிருந்து கிடைக்கும் நிதி பயன்படுத்தப்படும்- குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடவும் மருந்துகளைத் தரவும் உணவு வழங்கவும், உளவியல் ரீதியாக சிகிச்சை தரவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

கடந்த பத்தாண்டுகளில் மட்டும் போர் மற்றும் இயற்கைச் சீரழிவுகளில் 15 லட்சம் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். 50 லட்சம் குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். மலேரியா காய்ச்சலால் நிமிஷத்துக்கு 4 குழந்தைகள் உலகின் பல்வேறு பகுதிகளில் இறந்து கொண்டிருக்கின்றனர்,

(ஐ-8)

# ஆந்திராவில் நாயுடு மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது

## செய்தித்துறை கணிப்பு

புதுடில்லி, செப். 23,

ஆந்திரா மாநிலத்தில் தெலுங்கு தேசம் கட்சி தோல்வியைத் தழுவும். காங்கிரஸ் கட்சியே ஆட்சியைப் பிடிக்கும்.

தேர்தலுக்குப் பிந்திய கருத்துககணிப்பில் இவ்வாறு தெரிய வந்துள்ளது. இக்கருத்துக்கணிப்பை தனிப்பட்ட அமைப்புக்கள் எதுவும் நடத்தவில்லை. ஆந்திர அரசின் ஓர் அங்கமான மாநில செய்தித்துறை நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவே இது. ஆந்திரா வரலாற்றில் முதல் முறையாக அரசின் செய்தித்துறை தேர்தல் கருத்துக் கணிப்பை நடத்தி உள்ளது. கருத்துக்கணிப்பை நடத்த இத்துறைக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அது இவ்வாறு நடத்தி இருப்பது புதுமையானது.

வாக்களித்து விட்டு வெளியே வந்தோரிடம் வினாக்கொத்துக்கள் கொடுக்கப்பட்டு இக் கணிப்பு நடத்தப்பட்டது.

(ஐ)

# பத்திரிகையாளர்கள் மீது திமோரில் தாக்குதல்

டிலி, செப். 23

கிழக்குத் திமோர்தலைநகர் டிலியில் இரண்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் இந்தோனேசிய சார்பு ஆயுதக் கும்பலினால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

கிழக்குத் திமோருக்கு ஆஸ்திரேலியா தலைமையிலான ஐ. நா. சமாதானப் படையினர் சென்றிறங்கியபின்னர் அங்கு வெளிநாட்டவர்கள் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும்.

தாக்குதலுக்கு இலக்கான இரு பத்திரிகையாளர்களும் பாதுகாப்பான இடம் ஒன்றில் தஞ்சமடைந்தனர்.

இதேவேளை —

ஐ. நா. சமாதானப் படையின் அணிகள் தலைநகர் டிலியில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நேற்றுமுதல் செல்லத்தொடங்கியுள்ளன.

(ஐ-க)

### விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்காக

# இந்தியாவுக்கு எதிராக பாக். சர்வதேசநீதிமன்றில்வழக்கு!

இஸ்லாமாபாத், செப். 2௨

சர்வதேச நீதிமன்றில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த ஒகஸ்ட மாதம் இந்திய எல்லைப் பகுதியில் பறந்துகொண்டிருந்த பாகிஸ்தான் கடற்படை விமானம் ஒன்றை இந்தியா சுட்டு வீழ்த்தியது. இச்சம்பவத்தில் 16 பாகிஸ்தான் கடற்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதற்கு நஷ்டஈடாக இந்தியா 6 கோடி 2 லட்சம் டொலர்களைத் தர வேண்டும் என்று கோரியே இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இறந்தவர்களின் குடும்பத்துக்கு நஷ்டஈட்டுத் தொகை அளிக்கவும் இழந்த விமானத்துக்கு ஈடாகவும் பாகிஸ்தானுக்கு இத்தொகையை அளிக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது என்ற வகையில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடும் நோக்குடன் பாகிஸ்தான் கேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றில் முறைப்படி இந்த வழச்கைத் தாக்கல் செய்துள்ளது.

(ஐ-க)

## கடும் மழை

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பெய்து வரும் பலத்த மழையினால் 50 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. 10 பேர் உயிரிழந்தனர்.

மத்திய பிரதேசத்தின் சிந்துவாடா மாவட்டத்தில் உள்ள பழங்குடிக் கிராமத்திலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

பலத்த மழை காரணமாக மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணியை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மழையினால் 12 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-க)

# இடம்பெயர்ந்த திமோர் மக்களுக்கு அச்சுறுத்தல்

மேற்குத் திமோரில் தங்க வைக்கப்பட்டுள்ள கிழக்குத் திமோர் மக்களின் உயிர்களை காக்கும் முயற்சியில் ஐ. நா. தலையிட வேண்டும் என ஆயர் கார்லோ பிலோ அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்குத் திமோர் மக்கள் 2 லட்சம் பேர் வரை இந்தோனேசிய ஆதரவுப் படையின ரால் மேற்கு திமோருக்கு பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும்— இந்தோனேசிய ஆதரவுப் படையின் காட்டுமிராண்டித்தனத்தினால் இவர்கள் இறந்து விடக் கூடும் எனவும் அவர் அச்சம் தெரிவித்து ஐ. நாவுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை —

இந்த மக்கள் இந்தோனேசியாவின் நகரப் பகுதியில் குடியமர்த்தப்படலாம் என அமெரிக்க மனித உரிமை இயக்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

[ஐ-க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## PAPER CLASS

O/L கணிதம், ஆங்கிலம் இரு மாதங்களில் அடிப்படை அறிவில்லாதவர்களுக்கும் ஆரம்பத்திலிருந்து Credit, Distinction பெறுபேறடைய மிக அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி.

(69187)

## திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். லண்டனில் எக்கவுண்டனாக பணிபுரியும் 1960ஆம் ஆண்டு மணமகனுக்கு (பிரஜாவுரிமை உடையவர்) மணமகள் தேவை. படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(69282)

## தவறிவிட்டது

பத்மநாதன் அல்வீனா நாவலர் வீதி, நான்கு சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடைய எனது விசேட அடையாள அட்டை யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவா திரையரங்கு, சிவன்கோயிலடி யாழ்ப்பாணம். என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.

[69273]

## யாழ்ப்பாணம்

அதிபர்களே, ஆசிரியர்களே உங்கள் கல்லூரி நூல்களில் ஒரு நாடக நூலாவது இருக்க வேண்டாமா? மாணவர்கள் நாடகம் படிக்க, நடிக்க எழுத அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் யாழ்ப்பாணமா? கொழும்பா? நூலை வாங்குங்கள். ரூபா 50.

[69278]

## விற்பனைக்கு

கொம்பியூட்டர் Winds 98, லேசர் பிறின்டர், U.P.S-500, Sony V. C. D. செற் (2400w), டெக், நல்ல நிலையில் உள்ள சகல ஆவணங்களுடனான Honda CD 90 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு N. பாரத், 48, இரண்டாம்ஒழுங்கை, பிறவுண்வீதி. கந்தர்மடம். (69358)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் 406, பருத்தித்துறை வீதியும், வைமன் வீதியும் சந்திக்கும் இடத்தில் 1½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:— செ. அமரசிங்கம், 465/3, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம்.

(69281)

# வேலணை
# சாட்டி மாதா திருநாள்

பிரசித்திபெற்ற வேலணை சாட்டி
சிந்தாத்திரை மாதா ஆலயத் திருநாள் எதிர்வரும்
25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

★ 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடு, பவனி, ஆராதனை.

★ 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ். ஆயரின் தலைமையில் திருநாள் திருப்பலி.

★ 24 ஆம், 25 ஆம் திகதிகளில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து விசேட பஸ் சேவைகள் நடைபெறும்.

★ 24 ஆம் திகதி இரவு ஆலய வளவில் தங்குவதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அருட்திரு. யே. யே. மவுலிஸ்
ஆலய பரிபாலகர்

[69280]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தவராஜா துஷ்யந்தினி
(துஷி)

(யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவி)

உதயம் 04-09-1984 — ஈசன் பாதம் 22-09-1995

திதி: 23 - 09 - 1999

சிறகடிக்கும் உன் சிறுவயதில்
காலன் கவர்ந்து நான்காண்டுகள்
சென்று விட்டதோ துஷி
பொன்னுடல் மறைந்தாலும் - என்றும்
உன் நிஜங்கள் எம் நினைவில்
நீங்காமல் வாழ்கின்றாய்.

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
அக்காமார், தம்பி.

கௌரி ரெக்ஸ்,
பிரதான வீதி. பருத்தித்துறை.

(69239)

# இலவச இணைப்புடன்
## வரவு செலவுத் திட்டத்திற்கு முந்திய
# விற்பனை

**இரண்டு சில்லு உழவு இயந்திரம்**

**EDGRO SUPER 12** உழவு கலப்பையுடன்

இலவச இணைப்பு: சேற்றுழவுச் சில்லு (Mud wheel)

விநியோகஸ்தர்கள்:


**ஆ. சி. பொன்னம்பலம் சக புத்திரர்**

176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(69283)

# 2 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

உதயம் 25 — 05 — 1929



அஸ்தமனம் 14 — 10 — 1997

அமரர்

## கந்தையா சிவராசா

(வெளிச்ச வீட்டடி — கே. கே. எஸ்.)
(ஓய்வுபெற்ற பிரதம எதுமு வினைஞர், சுகாதாரத் திணைக்களம், தெல்லிப்பழை.)

திதி: 23-09-1999

அப்பா! அப்பா! என்று கதறி அழ எமையெல்லாம்
பரிதவிக்க விட்டு தங்கள் ஆத்மா போனதெப்படி?
இன்று போல் இருக்கிறது அந்த நினைவுகள்.
ஆண்டுகள் இரண்டு போனதெப்படி?
எமையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி,
மீளாத்துயில் கொள்ளும் தங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(சி/9031)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
**திரு. பூ. அ. பூபாலசிங்கம்**
அவர்களின் பாசமிகு தந்தை
## அமரர் ஆரோக்கியம் பூகோணப்பர்
(இளைப்பாறிய ஆசிரியர்)

15—09—99 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
தேவரையாழி இந்துக்கல்லூரி,
கரவெட்டி.

[69285]

# 91 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 08 — 10 — 1978



கண்நெகிழ 26 — 06 — 1999

## இராசரத்தினம் றஜிந்தன்

(மல்லாகம் மகாவித்தியாலய வர்த்தகப் பிரிவு மாணவன், 1997ஆம் ஆண்டு A/L)

தாயின் மணி முகம் மலரப் பிறந்த மன்னவா - நீ
தீயில் தீர்ந்து போன மர்மம்தான் என்னவோ
சிரித்த சிகரத்தை திரித்த தீயே - எமக்கு
உரித்த உறவை ஏன் பிரித்தாய் நீயே
எரித்த நேரம் கறுத்த முகிலே
கொட்டும்மழை பொழிந்திருந்தாலும்
கொளுத்தும் கொள்ளி பொறுத்திருக்குமோ - மழை
விட்டும் விண் வெளித்திருந்தாலும்
முழுத்தும் உடல் மூள மறுத்திருக்குமே
அக்கணமாவது உன் முகம் பார்த்தோமோ என
எக்கணம்தான் அந்த முகம் பார்ப்போமோ?

உன் பிரிவால் துயருறும்
இராசரத்தினம் தேவராணி
மற்றும் உடன்பிறந்த சகோதரர்கள்.

மயிலணி, சுன்னாகம்.

(69286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்தத்தை நிறுத்தக் கோரி

## சித்தாண்டியில் சமாதான ஊர்வலம்

மட்டக்களப்பு, செப். 23

சமாதான வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சித்தாண்டியில் நேற்று முன்தினம் சமாதான ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

பொதுஜன அபிவிருத்தி மன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

சித்தாண்டி ஸ்ரீசித்திர வேலாயுதர் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் மெதடிஸ்த தேவாலயத்தை சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் பேர் சமாதானத்திற்கான சுலோக அட்டைகளுடன் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் முடிவில் செங்கலடிப் பிரதேச செயலாளர் என். சிறிசங்கரிடம் ஜனாதிபதி, ஐ.நா. செயலாளர் நாயகம் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

★ போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

★ சகல தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும்.

இவை உட்பட பல கோரிக்கைகள் அம்மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

[ஐ-21]

### அப்பாவிகளின் சடலங்களுக்காக கண்ணீர் சிந்தாமல்

## நாட்டுமக்களை அழிவின் பாதையில் இட்டுசென்றோரை இனங்காணுங்கள்

### ஜே. வி. பி. அறிக்கை

கொழும்பு, செப். 23

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பலியான கிராம மக்களின் சடலங்களைப் பார்த்து கண்ணீர் விடுவதைவிட எமது சமூகத்தை அழிவின் பாதைக்கு இட்டுச்சென்றோரை இனங்காண முயற்சிப்பதே இன்றைய அவசர தேவையாகும்.

அம்பாறையில் 50 க்கும் மேற்பட்ட கிராம வாசிகள் படுகொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாக ஜே.வி.பி. அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் நாட்டை ஆண்ட முதலாளித்துவ அரசுகள் தமது நலனுக்காக உருவாக்கிக் கொண்ட இனவாதிகளின் யுத்தம் மேலும் பல அப்பாவிகளின் உயிர்களை ஒன்றாகப் பலியெடுத்து இலங்கை மண்ணை இரத்தத்தில் நனைத்துள்ளது.

இந்தப் படுகொலைகள் மூலம் விடுதலைப் புலிகள் தமது அரசியல் வெற்றிடத் தன்மையையும் கொடூரத்தன்மையையும் மீண்டும்ஒருமுறை உலகின் பார்வைக்குக் காட்டி உள்ளனர். அதேவேளை அப்பாவித் தமிழ் மக்களின் பிரதேசங்களுக்குள் ஊடுருவி அவர்களைக் கொடூரமாகக் கொன்று குவித்த முதலாளித்துவ அரசின் இராணுவமும் புலிகளின் இந்தச்செயலுக்குப் பங்கு வகித்துள்ளனர் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-8)

# மாதாந்தஉணவுநிவாரணம் அரச உத்தரவு கிடைத்தது

## தொடர்ந்து வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம். செப். 23

குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் தொடர்ந்து கிடைக்கவிருக்கின்றது,

இது தொடர்பான அறிவிப்பு கொழும்பில் இருந்து யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

இந்த உலர் உணவு நிவாரணம் கடந்த ஜூலையுடன் நிறுத்தப்பட்டிருந்ததும் —

பின்னர் இந்த நிவாரணத்தை செப்ரெம்பர் மாதத்துக்கு மட்டும் வழங்கும்படி பணிக்கப்பட்டிருந்ததும்—

தெரிந்தவையே.

ஒகஸ்ட் மாதத்துக்கான நிவாரணத்தை வழங்குவது தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒகஸ்ட் மாதத்துக்கான நிவாரணம் வழங்குவதற்கான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும்—

செப்ரெம்பர்முதல் மாதாந்தம் நிவாரணம் வழங்க அனுமதி கிடைத்துள்ளது என்றும்—

செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதத்துக்குரிய நிவாரணம் ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ-3-9)

## அமெரிக்காவில் மீனாட்சி அம்மனுக்கு கும்பாபிஷேகம்

ரெக்சாஸ், செப். 23

அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்தில் பியர்லாண்டில் உள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த வாரம் நான்கு தினங்கள் நடைபெற்றது.

கியூஸ்டன் நகரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த இந்து ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் சுமார் 500 பக்தர்கள் கலந்து கொண்டனர். 150 க்கும் மேற்பட்டோர் உபயகாரர்களாக இருந்தனர்.

1982 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தில் கடந்த 95 ஆம் ஆண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அமெரிக்காவில் கட்டப்பட்ட மூன்றாவது மிகப்பெரிய இந்து ஆலயம் இதுவாகும்.

[ஐ]

## பெரும்போக நெற்செய்கை காரைநகரில் ஆரம்பம்

### கால் நடைகளை கட்ட கோரிக்கை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது விவசாயிகள் பெரும் போக நெற்செய்கைக்குத் தயாராகி வருவதால் கட்டாக்காலி ஆடு மாடுகள் வயல்களுக்குச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் இதனை மீறும் கால் நடைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு காரைநகரில் ஆயிரத்து 300 ஏக்கர் வயல் நிலப்பரப்பு கட்டாக்காலி மாடுகள் உட்புகாதவாறு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுநெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை—

இம்முறை மேலும் ஆயிரம் ஏக்கர் வயல் நிலப் பரப்பு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை விவசாய சம்மேளனங்கள் மேற்கொண்டுவருகின்றன.

(ஐ-73)

## வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 23

இந்து சமயத்தவர்களது வாராந்த வழிபாடு சிறக்க வெள்ளிக்கிழமைகளில் பாடசாலைகளுக்கு பொது விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் மேற்படி அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து உரையாடியபோதே இந்து இளைஞர் பேரவையின் தலைவர் வே. கெ. தனபாலன் செயலாளர் சி. சி. வரதராசா ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

பொது விடுமுறை வழங்கும் வெள்ளிக்கிழமைகளில் பொது நிகழ்வுகள் எதுவும் நடைபெறாதிருக்கவும்—

கோயில்களில் இந்து அறநெறிப் பாடசாலைகள் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற உதவுமாறும் இச் சந்திப்பின் போது அமைச்சின் செயலாளரிடம் வலியுறுத்தப்பட்டது.

1996 செப் 24 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளில் தமிழ் மொழி மூல ஆசிரியர் நியமனத்தில் உயர் புள்ளி பெற்று வதிவிட வேறுபாட்டால் பாதிப்புற்றுள்ள சகலருக்கும் உலக ஆசிரியர் தினத்திற்கு முன் நியமனம் வழங்குமாறும் இச் சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

(ஐ-5)

## பாடசாலை புனரமைப்பு

சண்டிலிப்பாய், செப். 23

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது சேதமடைந்த பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் புனரமைப்புப்பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்பாடசாலை அயலிலுள்ள வீடு ஒன்றில் தற்காலிகமாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## காட்டில் வெடி மருந்து மீட்பு

கொழும்பு, செப். 23

மட்டக்களப்பு கந்தலடி பகுதி காட்டுப் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 20 கிலோ எடையுள்ள வெடிமருந்துப் பொருள்களை இராணுவக் குழு ஒன்று மீட்டுள்ளது.

ஏதேனும் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் நோக்குடன் அவை அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம்என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். பின்னர் அப் பகுதியில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன,

(ஐ - 8)

### தலைநகரில்:

## சந்தேக நபரான பெண் ஒருவர் பொலீஸாரிடம் தப்பினார்

கொழும்பு, செப். 23

விடுதலைப் புலிகளின் பெண் போராளி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கொழும்பு பொலீஸ் நிலையம் ஒன்றில் இருந்து தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப்பெண் தப்பிச்செல்ல உடந்தையாக இருந்ததாக நம்பப்படும் இரு பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப பெண் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் அவருக்கு உதவியாக வேறு பெண் ஒருவரும் தங்கி இருந்துள்ளார். அப்பெண்ணின் உதவியுடனேயே சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தப்பிச்சென்ற பெண்ணைத் தேடிப்பிடிக்க கொழும்பில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

(ஐ-8)

## எல்லைக் கிராம வாசிகளுக்கு 2 ஆயிரத்து 500 துப்பாக்கிகள்

கொழும்பு, செப். 23

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி உள்ள எல்லைப்புறக் கிராம வாசிகளுக்கு இரு தினங்களில் 2 ஆயிரத்து 500 துப்பாக்கிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களுக்கு துப்பாக்கிகளை இயக்குவதில் சிறு பயிற்சியும் அளிக்கப்பட்டிருப்பதாக அம்பாறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அச்சுறுத்தலை எதிர்நோக்கும் கிராமங்களைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப்படும் ஊர்காவற்படையினர் எக்காரணம் கொண்டும் பொலீஸ் நிலையங்களிலோ அன்றி வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளிலோ ஈடுபடுத்தப் படமாட்டார்கள்.

இதனை முற்றாகத் தடைசெய்யும் உத்தரவு ஒன்றை கிழக்குப்பகுதி பிரதிப் பொலீஸ்மா அதிபர் பத்மசிறி விடுத்துள்ளார்.

[ஐ-8]

### இனந்தெரியாத ஆயுதக்குழு நடமாட்டம்

## 300-க்கும் அதிக பொலீஸார் பதுளை காட்டில் தேடுதல்

கொழும்பு, செப். 23

பதுளை பொலீஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள மடில் சீமை பிடமாருவ காட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஆயுதக் கும்பல் ஒன்று ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து சுமார் 300 க்கும் மேற்பட்ட பொலீஸார் அங்கு பெரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைநேற்றும்தொடர்ந்து இடம்பெற்றது.

காட்டுக்குள் ஊடுருவியுள்ள ஆயுதக் கும்பலைக் கிராம வாசி ஒருவர் கடந்த திங்களன்று கண்டுள்ளார். உடனடியாக அவரை மிரட்டிக் கடத்திச் சென்ற அவர்கள் அந்த நபருடன் சிங்களத்தில் உரையாடி தண்ணீர் எடுத்து வருமாறு கோரி உள்ளனர்.

தண்ணீர் எடுப்பதற்காகச் சென்ற அவர் அங்கிருந்து தப்பி வந்து பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

[ஐ-8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
### பழைய மாணவர் சங்கப்
# பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 27 – 09 – 99 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு [பழைய நேரம்] கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறும் இதுவரை உறுப்பினராகச் சேராதவர்கள் சந்தா செலுத்தி உறுப்பினராகச் சேருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி ஜெ. கணேசரட்ணம்
செயலாளர்

திருமதி ப. செல்லத்துரை
உபதலைவர்

[சி/9020]

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 – 03 – 1923



விண்ணில்
14 – 10 – 1997

## திருமதி நாகலிங்கம் கண்மணி

திதி; 23 – 09 – 1999

வயிற்றில் எமைச் சுமந்து
வாழ்வு எல்லாம் எமக்காக்கி
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
வளர்த்தீர்கள் அம்மா! எமை எல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டு ஈராண்டு
ஆனாலும் உங்கள் நினைவால்
உருகி நிற்கின்றோம்.
வற்றாத கண்ணீருடன் நாமிங்கு
வாழ்கின்றோம் உங்கள் நினைவுகளுடன்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

39, மாவடி றோட்,
யாழ்ப்பாணம்.

(69236)

# ஓராண்டு நினைவஞ்சலி



வடகோவையூர்
## கவிஞர் க. இ. சரவணமுத்து
( சாரதா )
(முன்னாள் சிரேஷ்ட ஆசிரியர் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்)

மலர்வு:
19 – 10 – 1918

உதிர்வு:
04 – 10 – 1998

தக்க பல நூல் செய்தோன்

கவிஞர் சரவணமுத்து கற்றுணர்ந்த பேரறிஞன்
தவமுடையான் ஆசிரியன் தக்க பல நூல் செய்தோன்
கவிஞர் என — உலகு கைகூப்பி வாழ்த்தியது
சிவனடியே சிந்தித்தான் தேவருக்கே விருந்தானான்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்,
நண்பர்கள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(69246)

## கைப்பணிப்பொருள் கண்காட்சி

தென்மராட்சி, செப். 23

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும் கூட்டுறவு மகளிர் மனைப் பொருளியல் பயிற்சியின் கைப்பணிப்பொருள்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் சனி ஞாயிறு தினங்களில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் இ. இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோமதி திருநாவுக்கரசுவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கி.வீரசிங்கம். சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராசா, சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் துரைசிங்கம் ரகு ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.23

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் செ. குபேரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க குணராசா பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் உதவிக்கல்விப்பணிப்பாளர் கே. தனபாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

யாழ். பல்கலைக்கழக ஒய்வு பெற்ற சிரேஷ்ட உதவிப் பதிவாளர் த. காசிநாதன் நிறுவுனர் நினைவுரை நிகழத்துவார். (ஐ-க-139)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 23

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி எம். இராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்திய நிபுணர் பேராசிரியர்வி. குகானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி செல்வராணி குகானந்தம் பரிசில்களை வழங்குவார். [க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி
1998 / 1999
இரண்டாம் அரையாண்டு

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி
1999 / 2000
முதலாம் அரையாண்டு

மேற்படி கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் 25-09-1999 சனிக்கிழமை மு. ப. 9. 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகும்.

பதிவாளர்

[சி/9029]

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் பாவனைக்குரிய ஐஸ்கோன், குளிர்சாதனப் பெட்டிக்குரிய யூனிற் வகை, வெங்காயம் பொதி செய்யும் நெற்பாக் மற்றும் மரப் பெட்டி வகை, ஒரியன்ஸ் ரொபி வகைகளையும் பெற்றுக் கொள்ள:

### நாதன் களஞ்சியம்
213C, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்,

தொலைபேசி
பக்ஸ் ( FAX ) } 2916

[69212]

## தென்னிந்திய திருச்சபை - யாழ்.ஆதீனம்
### ஆதீன விழாவும் உதவிக் குருத்துவ அபிஷேகமும்

மேற்படி விழா 25 – 09 – 1999 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு (S. L. T.) ஆரம்பமாகும்.

காலை 9.00 மணி

### உதவிக் குருத்துவ அபிஷேக ஆராதனை

பின்வரும் ஊழியர்கள் உதவிக் குருக்களாக அபிஷேகம் பண்ணப்படுவர்.

- ஜூட் எம். சுதர்சன் (சண்டிலிப்பாய்)
- பா. தேவதாஸ் (சங்கானை)
- எஸ். குகனேஸ்வரன் (வரணி)
- டெய்ஸி ஆசீர்வாதம் (தெல்லிப்பழை)

காலை 11.00 மணி
ஆதீன விழாவும், கலை நிகழ்ச்சிகளும்.

அ. ஜெயராஜன்
செயலாளர்,
தெ. யா. அ. ஆ.

வட்டுக்கோட்டை.

(சி/9014)

சாவகச்சேரி
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி. (வ. து)
# பதவி வெற்றிடம்
## கிளை முகாமையாளர்

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ். அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு 10– 10—99 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகவோ நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

**தகைமைகள்:**

1. கல்வித்தகைமை;-
   கூட்டுறவுப் பணியாளர் ( சாதாரணம் ) தராதரப் பத்திரம்/க.பொ.த ( சாதாரண ) தராதரப்பத்திரம், எண் கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம், தமிழ் பாஷை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடனான ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி.

   அல்லது

   கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயது:- 25—50

சம்பளம்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபத்துக்கமைய,
108: 81 — 14 ஆவது (31/97 — 16 ஆவது)
2650 — 3750
50/10 — 60/10

4. சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட காசுப்பிணை, உறுதிப்பிணை செலுத்தப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்.
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி.
21—09—99

(சி/9023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வல்லமை எங்கிருந்து வரும்?

இந்த நாட்டில் சிங்கள பௌத்த மக்கள் அனுபவித்து வரும் சகல உரிமைகளையும் இங்கு வாழும் ஏனைய இன மக்களும் அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

அடுத்த சில மாதங்களுக்குள் இரண்டு தேர்தல்கள் வரும், இரண்டாயிரமாம் ஆண்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விடும் என்று பேசிய அதே கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்ட கருத்தையும் மொழிந்துள்ளார்.

ஆகையால் இந்தக் கருத்து, தேர்தலில் வாக்குச்சேகரிப்பதற்கான கவர்ச்சிக் கருத்து–உத்தி- என்பது மிகவும் வெளிப்படை.

அரசாங்கத்தின் ஐந்து வருடப் பூர்த்தியைக் கொண்டாடு முகமாக காலியில் நடைபெற்ற பேரணியில் வைத்தே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதால், இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களுக்குரிய கோஷங்களில் இதுவும் முதன்மை வகிக்கும் என்று நம்பலாம்.

இந்தக் கருத்தை, தேர்தல் கோஷத்தைக் கேட்டதும் 1994 ஆம் ஆண்டுத் தேர்தல்களே எவருக்கும் ஞாபகம் வரும். போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சு மூலம் அரசியல் தீர்வைக் கொண்டு வரப்போவதாகச் சந்திரிகாவும் அவரது ஆதரவாளர்களும் தேர்தல் மேடைகளில் பொழிந்து வந்தனர்; முழங்கினார்கள். ஆனால் —

அரசாங்கம பதவிக்கு வந்து ஐந்து வருடங்கள்பூர்த்தியானது குறித்து வெற்றி விழாக்கள் கொண்டாடப்படும் இவ்வேளை, முந்திய தேர்தல் வாக்குறுதியில், ஓர் எழுத்தையேனும் அரசு அமுல் செய்யவில்லை என்ற ஏமாற்றம் தமிழர் மனங்களில் குத்திட்டு நிற்கிறது.

சொன்னதைச் செய்வதற்குத் துணிச்சலும் விருப்பமும் இல்லாமல், அமைச்சர் தொண்டமான் கூறுவது போல, வீண் கௌரவம் பார்த்துப் போர் வழி நாடியவர் ஜனாதிபதி சந்திரிகா. அரசாங்கம் மக்களுக்காகவே அன்றி அரசியல் வாதிகளுக்காக அல்ல. அவ்வாறிருக்க அரசு என்றால் சொர்க்கத்தில் இருந்து விழுந்தது என்ற போலிக் கௌரவத்துடன் கடந்த நாற்பத்தாறு மாதங்களாகப் போர் நடத்தப் பட்டுவருகிறது.

போரின் அழிவும், தாக்கமும் தமிழர்களுக்கு மட்டுமல்ல; சிங்கள மக்களுக்கும் தான். போர் வடக்கு — கிழக்கு மாகாணத்தோடு மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை; நாடளாவிய ரீதியில் பரந்துவிட்டது. இவை தெரிந்தும்போரை நிறுத்துவதற்கு அரசு முனையவில்லை; விரும்பவில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதும், அதனைப் பேணுவதும் கடினம் என்பதனை யதார்த்தம் உணர்ந்த அனைவரும் கூறி வருகிறார்கள். ஆனால் அரசு போலிக் கௌரவத்தைச் சூடிக் கொண்டு இராணுவத் தீர்வை நாடும் பாங்கிலேயே செயற்பட்டு வருகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் சிங்கள பௌத்தர்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும், இங்கு வாழும் ஏனைய மக்களும் அனுபவிக்க வகை செய்யக்கூடிய வல்லமை ஜனாதிபதிக்கு எங்கே வரப் போகிறது? வீரவிதான போன்ற பேரினவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுககாமல் அவற்றோடு 'ஒத்தோடும்' அரசு எல்லாருக்கும் எப்படி சகல உரிமைகளையும் வழங்கும்?

எல்லாமே பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை தான்!

# 'கிபிர்' குண்டுத் தாக்குதலுக்கு ஆயர்கள் கூட்டாகக் கண்டனம்

## சேதங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்

வவுனியா, செப். 23

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் அப்பாவிப் பொது மக்கள்மீதுகுண்டு வீசப்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டோம். இச் செயலுக்கு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புக்கு விஜயம்செய்து குண்டு வீச்சினால் சேதமடைந்த வீடுகளையும், காயமடைந்தவர்களையும் பார்வையிட்ட யாழ்ப்பாணம், மன்னார்,மட்டக்களப்புமாவட்ட கத்தோலிக்க ஆயர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இது தொடர்பாக தெரிவிக்கையில் கூறியதாவது:—

விடுதலைப்புலிகளின் நிலைகளை தாம் தாக்கியதாக அரச படைகள் கூறியுள்ள போதிலும் வேறுசெய்தி ஊடகங்கள் ஊடாகவும் பொது அமைப்புகள் ஊடாகவும் இத் தாக்குதல் பொது மக்கள் மீது நடத்தப்பட்டுள்ளது என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

நான் இங்கு நேரில் வந்து பார்த்த பின் உண்மையான நிலைவரம் விளங்குகின்றது. இங்கு வாழ்ந்து வந்த மக்கள் பெரும்பாலும் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்பவர்கள்.

விமானப்படையினரின் இத் தாக்குதலானது வறிய உதவியற்ற இடம்பெயர்ந்த அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தப்பட்டுள்ளது. எனவே இத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மன்னார் மாவட்ட ஆயர் அதிவந். யோசப் இராயப்பு கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:—

புதுக்குடியிருப்பு மக்களுக்கு நடந்த துயரத்தின் உண்மை நிலையினை அறிந்து உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறவே நாம் இங்கு வந்துள்ளோம்.

அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்து விட்டு நியாயப்படுத்துவதைப் பார்த்தால் இந்த அரசு தமிழ் மக்களை ஆட்சி செய்வதற்கான உரிமையை இழந்து விட்டது என்பதே உண்மையாகும்.

உயிரைக் காக்கவென இங்கு வாழ்ந்த மக்களின் உயிரைப் பறிக்கும் இந்த நிலை இனியும் தொடரக் கூடாது. இந்தக் குண்டு வீச்சுச் சம்பவமானது பொதுமக்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் உளவியல் ரீதியான பாதிப்பினையும் ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டு தமது இலக்கை அடைந்து விட்டதாக ஒப்புவித்து வருகின்றனர். ஆனால் இங்கு பொது மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனவே இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் இத்தகைய படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஐ-5-7)

# ஞானச்சுடர் நூல் வெளியீடு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு அருள் மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'ஞானச்சுடர்' மாதந்த நூல் வெளியீட்டு விழா பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கான வெளியீட்டுரையை கொழும்புத் துறை ஓய்வுபெற்ற அதிபர் கா. கணேசதாசன் நிகழ்த்துவார்.

இந் நூல் ஆய்வுரையை வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.ஸ்ரீதயளான் வழங்குவார். (ஐ-30)

# அறியாமையை அகற்றல் சிறந்த அறநெறியாகும்

## ஆண்டு விழாவில் உரை

அறியாமையை அகற்றுவதே இந்த அறிவொளி மன்றத்தின் முக்கிய பணியாக அமைந்துள்ளது. மக்சள் அறிவெனும் ஒளி பெற்று நல்வழியில் வாழ வேண்டுமென்பதே சிறந்த அறநெறியாகும்.

இவ்வாறு நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலையின் பதினேழாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கூறினார்.

மேற்படி விழா தலைவர் செ. குமாரசாமி தலைமையில் அறிவொளி மன்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிக் கொள்கைகளான பெரியோரை மதித்தல், இறைசிந்தனை, அயலவரை நேசித்தல், பொய் பேசாமை,களவு செய்யாமை, கல்லாமை அகற்றல் என்பனவற்றை சிறுவயதிலிருந்தே ஊட்ட வேண்டும்—என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

கிராமம் தோறும் அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கி அவற்றின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆலயங்கள் சமயத்தாபனங்கள் அறநெறி வளர்ச்சிக்காக ஊக்குவித்து உழைக்க வேண்டும். மக்கள் சமயஅறிவு பெற்றால் தான் அறநெறி வாழ்வைக் கடைப்பிடித் தொழுகுவர். இன்று நம் மத்தியில் மதம் மாறும் நிலைக்கு முக்கிய காரணம் ஏழ்மையும் அறிவின்மையுமே எனக் கூறினார்.

1998 ஆம் ஆண்டு அறநெறிப் பாடசாலையால் நடத்தப்பெற்ற பேச்சு, சமய அறிவு, திருக்குறள் மனனம், திருமுறைப் பண்ணிசை ஆகிய் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு யாழ் மேலதிக அரச அதிபர் பரிசில்களை வழங்கினார்.

இறுதியில் பட்டிமன்றமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [ஐ-74]

# பாலர் கல்வி தொடர்பாக பல்கலைமட்டத்தில் ஆய்வு

## விளையாட்டு விழாவில் தகவல்

வலிகாமம் தெற்கு,செப் 23

பல்கலைக்கழகத்தில் கூட பாலர் கல்விக்கானபல செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எண் திறன், எழுத்துத்திறன், மொழித்திறன், பேச்சுத் திறன் போன்றவற்றை சிறுவர்களிடையே எவ்வாறு வளர்த்தெடுக்கலாம் என்பது பற்றி பல்கலைக்கழக மட்டத்தில் எமது மாணவர்களால்.கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முடிவுகள் வெளிவரும் போது எமது கல்வியின் அபிவிருத்தி பற்றிய பல சிந்தனைகளுக்கும் விடை கிடைக்கும்.

உடுவில்இந்துஇளைஞர்மன்றத்தின் பாலர் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் மன்றத்தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் இவ் விளையாட்டு விழா நடைபெற்றது.

கலாநிதி சபா. ஜெயராசா தமதுஉரையின்போதுமேலும் கூறியதாவது:

உலகம் முழுவதிலும் இன்று முன்பள்ளியின்அவசியம் உணரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெறுகின்ற எந்த ஒரு கல்வி வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவது முன்பள்ளிக்கல்வியே.

எமது நாட்டில் பல நிறுவனங்களாலும் மாணவர்களுக்கானமுன்கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் பாலர்கல்வி பற்றிய மூன்று நூல்களை வெளியிட்டுள்ளோம்.

பாலர் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், பாலர்களுக்கான கதைகள், பாலர் விளையாட்டுக்கள் பற்றி இந் நூல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன

இன்று நடைபெற்ற இவ் விளையாட்டுக்கள் யாவும் உளவியல் அர்த்தம் செறிந்தவையாகக் காணப்பட்டன. விளையாட்டுக்கள் மூலம் சிறுவர்களின் அறிவு வளர்வதோடு, அவர்களின் திறன்கள், மனப்பாங்குகளும் வளர்க்கப்படுகின்றன. நவீன கற்பித்தல் யுத்திகளுடன் கலந்து விளையாட்டுக்களும் வழங்கப்பட வேண்டும்—என்றார்.

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி அ. முத்துக்குமாரசாமிவலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர்எஸ். சிவனேசன் ஆகியோர்சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பாலர்களுக்கான பரிசுகளை கலாநிதி சபா. ஜெயராசா வழங்கினார். (ஐ,152)

# பல்கலைக்கழக திட்டங்களை ஒருங்கிணைக்க இயக்குநர்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ், பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் சகல வேலைத்திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமிடலுக்காக இயக்குநர் ஒருவரும் பிரதி இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பௌதீக வியல்துறையைச் பேராசிரியர் எஸ். சேர்ந்தசாமி இயக்குநராகவும். திருமதி நித்தியா தர்மசீலன் பிரதி இயக்குநராகவும் கடமையாற்றுவர்.


இவர்கள் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த தகவல்களைச் சேகரித்து நடைமுறைப்படுத்துவர் என துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

| |
|---|
| **நாளை** |
| புரட்டாதி 07 |
| வெள்ளிக்கிழமை |
| திதி: சதுர்த்தசி |
| மாலை 5.49 வரை |
| நட்சத்திரம்: சதயம் |
| முற்பகல் 9.16 வரை |
| நடேசரபிஷேகம் |
| சுபநேரம்: 6.02—7.32 |
| ராகுகாலம்: 10.32—12.02 |
| (பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி) |

**உதயவாக்கு**

நல்லதைச் செய்தவன் நல்லவனாகி, நல் பிறவியைப் பெறுகிறான்.

— உபநிஷதம்



## சாயி சிந்தனை

அன்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமானால், அன்பைப் பகிர்ந்து கொண்டு அனைவருக்கும் சேவை செய்து நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அன்பு என்பது Expansion தானே தவிர Contraction அல்ல மனித குலம் முழுவதையும கணக்கில் எடுத்துக் கொண்டு அன்பு செலுத்த வேண்டுமே தவிர குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டுமே உங்கள் அன்பு பயனளிப்பதாக இருக்கக் கூடாது.

''ஏகாத்மாஸர்வ பூத அந்தராத்மா'' எல்லா உயிரினங்களிலும் இருப்பது ஒரே ஆத்மாதான். இது தான் உலகளாவிய பிரேம தத்துவத்தின் அடிப்படைக் கருத்து. வாழ்க்கையில் அன்பு போய் விட்டதென்றால் அனைத்துமே போய் விட்டது எனப்பொருள். பேச்சில் இருக்கும் பிரேமை சத்யம்; செயலில் இருக்கும் பிரேமை தர்மம்; எண்ணங்களில் இருக்கும் பிரேமை சாந்தி.

[ஆதாரம்: சாயி அருளமுதம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிஇடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே.

கடந்த ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

ம் மாதம் 15 ஆம் திகதி வரை விமானப் பயண அனுமதி பெற்றோரில் ஒரு பகுதியினரின் விவரங்கள் கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்டன. மிகுதி பின்னர் வெளியிடப்படும்.

யாழ்ப்பாணம்

(110309ஏ), (110396ஏ),
(071680ஏ), (092667ஏ),
(093899ஏ), (100363ஏ),
(100363பி), (102361பி),
(104615ஏ). (104615பி),
(104615சி), (104634ஏ),
(104678ஏ), (104754ஏ),
(104847சி), (104847டி),
(104847ஈ), (104847எவ்),
(104933ஏ), (109118ஏ),
(109121ஏ), (109121பி),
(109121சி), (109142ஏ),
(109150ஏ), (109150பி),
(109150சி), (109150டி),
(109151ஏ)
[109172பி], ]109172சி],
[109190ஏ], [109190பி],
[109208ஏ], [109246ஏ[,
[109254ஏ], [109335ஏ],
[109389ஏ], ]109526ஏ],
[109566ஏ], [109570ஏ],
[109582ஏ], [109587ஏ],
[109587பி], [199587சி],
]112062பி], [112109பி],
[112109சி], [112109டி],
[112269ஏ[, [112277ஏ],
[112311ஏ], [112315ஏ],
[112338ஏ], [112356ஏ],
[112356பி], [112356சி],
[112424ஏ], [112431ஏ],
[112431பி], [112431சி],
[112432ஏ], [112437ஏ],
[112437பி], [112439ஏ[,
[112452ஏ], [112452பி],
[112452சி], [112458ஏ],
[112462ஏ], [112462பி],
[112470ஏ], [112470பி],
[112479ஏ], [112497ஏ],
[112497பி], [112497சி],
[112498ஏ], (112510ஏ),
(112518ஏ), (112519ஏ),
(112532ஏ), (112532பி)
(110309ஏ), (110396ஏ),
(071680ஏ), (092667ஏ),
(093899ஏ), (100363ஏ),
(100363பி), (102361பி),
(104615ஏ).
('04615பி), (104615சி),
(104634ஏ), (104678ஏ),
(104754ஏ), (104847சி),
(104847டி), (104847ஈ),
(104847 எப்).
(104933ஏ), (109118ஏ),
(109121ஏ), (109121பி),
(109121சி), (109142ஏ),
(109150ஏ), (109150பி),
(109150சி),
(10ບ150டி), (109151ஏ),
(109172சி), (109190ஏ),
(109190பி), (109208ஏ),
(109246ஏ), (109254ஏ),
(109335ஏ), (109389ஏ),
(109526ஏ), (109566ஏ),
(109570ஏ), [109582ஏ],
[109587ஏ], [109587பி]'
[109587சி], [112062பி],
[112109பி]
[112109சி], ]112109டி],
[112269ஏ], [112277ஏ],
[112311ஏ] [112315ஏ],
[112338ஏ], [112356ஏ],
[112356பி], [112356சி].
[112426ஏ], [112431ஏ],
[112431பி], [112431சி],
(112432ஏ), (112437ஏ),
(112437பி), (112439ஏ),
(112452ஏ), (112452பி),
(112452சி).
(112458ஏ), (112462ஏ),
(112462பி), (112470ஏ),
(112470பி), (112470சி),
(112497ஏ), (112497பி),
[112497சி], (112498ஏ).
(112510ஏ), (112518ஏ),
(112519ஏ), (112532ஏ),
(112532பி), (112532சி),
(112532டி), (11257ஏ),
(112562ஏ), (112563ஏ),
(112591ஏ),
(112628ஏ), (112629ஏ),
(112629பி), (112629சி),
(112629டி), 112639ஏ),
(112639பி), (112639சி),
(112639டி), (112639ஈ),
(112645ஏ).
(112670ஏ), (112671ஏ),
(112679ஏ), (112679பி),
(112694ஏ), (112694பி),
[112699ஏ], [112704ஏ],
[112704பி], [112704சி].
(112706 ஏ), (112799ஏ),
(112715 ஏ), (112715 பி),
(112721 ஏ), (112721 பி),
(112727 ஏ), (112727 பி),
(112723 ஏ), (112728 பி),
(112728 சி),
(112728 டி), [112728ஈ],
[112741 ஏ], [112741 பி],
[112741 சி]. [112741 டி[,
]112741 ஈ], [112749 ஏ],
[113219 பி], [113709 பி[,
[113709 சி],
(113709டி), (113779ஏ),
(113779பி), (113783ஏ),
(113804ஏ), (113810ஏ),
(113812ஏ), (113824ஏ',
(113824பி), (113824சி).
(113824டி), (113825ஏ),
(113839ஏ), (113839பி),
(113839சி), (113842ஏ),
[113842பி], [113843ஏ],
[113843பி], [113846ஏ]
[113846பி].
[113941சி[, [113941டி],
[113946ஏ], [113947ஏ[,
[113947பி], [113950ஏ],
[113953ஏ], [113962ஏ],
[113962பி], [113968ஏ].
[113968பி], [113978ஏ],
[113978பி], [113978சி],
[113986ஏ], [113989ஏ[,
[113992ஏ], ]113994ஏ],
[113995ஏ], [113995பி],
]114000ஏ].
[114008ஏ], [114010ஏ],
[114012ஏ], [114018ஏ],
]114023ஏ], [114023பி],
]114023சி[, [114023டி],
[114025ஏ]. [114025பி].
[114025சி[, [114030ஏ],
[114030பி], [114033ஏ],
[114033பி], [114035ஏ],
[114040ஏ[, [114048ஏ],
[114051ஏ], [114051பி].
(113856 ஏ), ([13857 ஏ)'
113858 ஏ), (113869 ஏ),
(113869 பி), (113869 சி),
(113869 டி), (113875 ஏ),
(113879 ஏ), (113879 பி),
(113881 ஏ), (113881 பி),
(118884 ஏ), (113885 ஏ),
(113886 ஏ), (113890 ஏ),
(113890 பி), (113895 ஏ),
(113895 பி), (113895 சி).
(113905ஏ), (113906 ஏ),
(113915 ஏ), (113926 ஏ),
(113931 ஏ), (113931 பி),
(113931 சி), (113937 ஏ),
(113941 ஏ), (113941 பி),
(114053ஏ), (114060ஏ),
(114062ஏ), (114065ஏ),
(114065பி), (114065சி),
(114065டி), (114075ஏ),
(114076ஏ), (114076பி),
(114082ஏ), (114083ஏ),
(114088ஏ), (114088பி),
(114091ஏ), (114091பி),
(114091சி), (114091டி),
(114091எவ்), (114094ஏ).
(114094பி), (114094சி),
(114095ஏ), (114100ஏ),
(114103ஏ), (114103பி),
(114104ஏ), (114104பி),
(114104சி), (114104டி).
[114105ஏ], [114106ஏ],
[114109ஏ], [114110ஏ],
[114119ஏ], [114124ஏ],
[114124பி], [114124சி],
[114125ஏ], [114139ஏ].
[114148ஏ], ]114148பி],
[114149ஏ], [114154ஏ],
[114155ஏ], [114158ஏ],
[114159ஏ], [114168ஏ],
[114168பி], [114168சி].
(114168 டி), (114168ஈ);
(114168 பி), (114170 ஏ),
(114187 ஏ), (114189 ஏ),
(114189 பி), (114189 சி),
(114189 டி), (114195 ஏ),
(114195 பி), (114200 ஏ),
(114206 ஏ), (114209 ஏ),
(114211 ஏ), (114219 ஏ)'
(114227 ஏ), (114227 பி),
(114227 சி), (114229 ஏ).
(114236ஏ), (114236பி),
(114243ஏ), (114244ஏ).
(114544பி), (114244சி),
(114244டி), (114244ஈ),
(114244எவ்), (114244யி),
(114246ஏ.) (114246பி),
114246சி), (114246டி),
(114252ஏ), (114252பி),
(114252சி), (114252டி),
(114252ஈ), (114252எவ்),
114252யி),
[114253ஏ[, [114258ஏ],
[114260ஏ], [114260பி],
[114261ஏ], [114261பி[,
[114261சி], [114261டி],
(114267ஏ), (114301ஏ),
[114301பி],
[114301சி], [114958ஏ],
[115782ஏ], [115786ஏ],
[115803ஏ], [115804ஏ],
[115804பி], [115808ஏ],
(115820ஏ], [115828ஏ],
(115831ஏ], [115839ஏ],
[115841ஏ], [115841பி],
[115875ஏ], [115898ஏ[,
[115910ஏ], [115923ஏ[,
[115924ஏ], [115966ஏ],
[123800ஏ], [123800பி],
[12730ஏ], [11441ஏ[,
[113270ஏ].

(தொடரும்)


## கேள்வி அறிவித்தல்

### பருத்தித்துறை பிரதேச செயலகம் 1999 ஆம் ஆண்டுக்கான வேலைகள்

05-09-99 ஆம் திகதிய உதயனில் பிரசுரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விக்குரிய படிவம் வழங்கும் திகதி 04-10-99 ஆகவும் கேள்விகள் ஏற்கும் திகதி 6-10-99 காலை 10.00 மணி ஆகவும் கேள்விகள் பரிசீலனை செய்யும் காலம் 6-10-99 மாலை 2. 00 மணி எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

ஆ. சிவசுவாமி,
பிரதேச செயலர்,
பருத்தித்துறை.

(சி/9033)


## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நகரில் — அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாமா என்றழைக்கப்படும் கந்தையா கோபாலபிள்ளை (வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பு நகரில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று விட்டு சைக்கிள் ஒன்றில் தனது நான்கு வயதுக் குழந்தையுடன் கல்லடித் தெருவில் உள்ள வீட்டுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்த சமயம் புனித மிக்கேல் கல்லூரிக்கு அருகில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21)

## மாதகலில் இயங்கி வந்த சந்தைகள் செயலிழப்பு

### மீண்டும் திறக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், செப். 23

மாதகலில் முன்னர் செயற்பட்டு வந்த சந்தையும், மீன் சந்தையும் புனரமைப்பு செய்யப்படாதிருப்பதால் மீளக் குடியேறிய மக்கள் சிரமமடைந்து வருகின்றனர். இதனால் பொருள்களை விற்பவர்கள் வீதி ஓரங்களிலுள்ள மர நிழல்களில் வைத்து வியாபாரம் செய்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இச்சந்தையை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம அலுவலகத்திடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-135)


## வட்டு.கிழக்கு தாவளை சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

1 ஆம் பரிசு 170
2 ஆம் பரிசு 1168
3 ஆம் பரிசு 1128

ஆறுதல் பரிசுகள்

631 1803 989 1786
1438 1097 136

பரிசிற்குரியவர்கள் 10-10-1999-க்கு முன் வந்து நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

— நிர்வாகம்

தாவளை சனசமூக நிலையம்,
வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.

(69287)


## உடற்பயிற்சிக் கண்காட்சி

அறவழி நிலையத்தினரால் தென்மராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்படும் அறவழி மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் உடற்பயிற்சி கண்காட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் அறவழி நிலையத் தலைவர் வீ.ஜீ.தங்கவேல் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலர் பு. சுந்தரம் பிள்ளைதென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கனகசபை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா உட்பட பலர் கலந்து கொள்வர். (ஐ-117)


## இளைப்பாற்றுக்கு முன் ஆயத்தங்கள்

### அரச ஊழியர்களுக்கான கருத்தரங்கு

26-09-99 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.

பங்குபற்றுவோர்:

Dr. இ. சிவசங்கர்
[யாழ். போதனா வைத்தியசாலை]

திரு. செ. நாகராசா
[கணக்காளர், யாழ். செயலகம்]

திரு. இ. தவராஜா
[பதவிநிலை அலுவலர், யாழ். கல்வி வவயம்]

அரச ஊழியர்கள் அழைக்கப்படுகின்றனர்.

யாழ். றோட்டறிக் கழகம்.

[சி/9035]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

# ஆறு விக்கெட் இழப்புக்கு இலங்கை 254 ஓட்டங்கள்

காலி, செப். 23

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரெஸ்ட் போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

இலங்கை அணிக்கு சனத் ஜெயசூரியாவும் ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்டீவ் வோவும் தலைமை வகிக்கிறார்கள். நேற்று நாணயச் சுழற்சியில் முதலில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் தாம் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இலங்கை அணியின் ஆரம்பம் சற்றுசளைத்துப் போனாலும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடியதன் மூலம் இலங்கை அணி சற்றே ஸ்திரமான நிலையை அடைந்தது.

நேற்று ஆட்டநேர இறுதியில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை அணியில் அரவிந்த டி சில்வா 64 ஓட்டங்களையும் ரசல் ஆர்னல்ட் 50 ஓட்டங்களையும் மகில ஜயவர்த்தன 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆஸ்திரேலிய அணி சார்பில் பந்து வீச்சில் ஷேன் வோர்ன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

நேற்று ஆட்டத்தின் இறுதியில் ரொமேஷ் களுவிதாரண 24 ஓட்டங்களுடனும் சமிந்த வாஸ் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது ஆடிக்கொண்டிருந்தனர். (இ–ரி)

## கூடைப்பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், செப். 23

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக கூடைப்பந்தாட்ட அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி 17 வயது பிரிவு கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையில் இன்று சினேகபூர்வ கூடைப்பந்தாட்டப்போட்டி இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியானது மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் காலை 7–00 மணிக்கு ஆரம்பமாகும்.

## கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களில் இருந்தும் பாடசாலைகளில் இருந்தும் 18, 22 வயதுப் பிரிவுகளில் வீரர்களைத் தேர்ந்தெடுத்து யாழ். மாவட்ட தெரிவு அணிகளை உருவாக்கவுள்ளது.

அணித் தெரிவுகள் நாளையும் மறுதினமும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன. இத்தெரிவுக்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய அழைப்பு சம்பந்தப்பட்ட கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் சங்கத்தினால் அனுபபிவைக்கப்பட்டுள்ளன. (உ–ரி)

## 3 நாள் கிரிக்கெட் போட்டி

சென்றலைட்ஸ் வி. க. அணிக்கும் ஜொனியன்ஸ் வி. க அணிக்கும் இடையிலான வருடாந்த மூன்று நாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் யாழ், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது,

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியை யாழ். கிரிக்கெட் மன்றத் தலைவர் கப்டன் என். சோமசுந்தரம் ஆரம்பித்து வைப்பார். போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு சபாரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்படும். (உ–6)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும்—லீக் முறையிலான—உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள்பற்றியவிவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ நெல்லியடி ம. ம. வி. எதிர் நெல்லியடி விக்கினேஸ்வராக் கல்லூரி [நெல்லியடி ம. ம. வி. மைதானம்]

★ தொண்டமானாறு ம. வி. எதிர் கொற்றாவத்தை அ. த. பாடசாலை [திக்கம் மைதானம்]

### 18 வயதுப் பிரிவு

★ வேலாயுதம் ம. வி. எதிர் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி [நெல்லியடி ம. ம வி. மைதானம்]

★ பொன்னம்பலம் ம. வி. எதிர் கொற்றாவத்தை அ. த. பாடசாலை [திக்கம் மைதானம்]

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும்பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான —லீக் முறையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ள அணிகள்பற்றியவிவரம் வருமாறு:

★ 4 மணிக்கு:- சென் றோக்ஸ் வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி. க.

★ 5 மணிக்கு:- சென் நிக்கலஸ் வி. க. எதிர் சென் மைக்கல் வி. க.

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை ஆதரவுடனும், பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடனும் வடமராட்சி ரீதியில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி லரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ சிவானந்தா வி.க. எதிர் பொலிகை பாரதி வி. க.

★ றேஞ்சர்ஸ் வி. க. எதிர் சென். அன்ரனீஸ் வி. க.

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான சினேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். 16, 18 வயதுப் பிரிவு அணிகள் இந்த ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ளன. (உ-ரி)

## இறுதி ஆட்டம்

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் வருடாந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் மாலை 4–00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் ஏ. ர ஜீவன் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் இப்போட்டி நடைபெறவுள்ளது.


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் இன்று சப்பறத் திருவிழா

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் சப்பறத் திருவிழா இன்று (23-09-99) வியாழக்கிழமை காலை 8–30 மணியளவில் 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகும். இரவும் பகலும் சிறந்த மங்களவாத்தியக் கச்சேரி நடைபெறும்.

இரவு 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகி விசேட சாத்துப்படியோடு முத்துச் சப்பறத்தில் ஸ்ரீ வல்லிபுராழ்வார் வீதியுலா வருவார்.

சப்பறத் திருவிழா உபயகாரர்

(69294)



## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் வேலாயுதர்

கைதடி கிழக்கு ஆறுமுகம் வேலாயுதர் 22- 9- 99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் சின்னப்பிள்ளை, ஞானம்மா, அன்னலட்சுமி, பொன்னுத்துரை (ஒய்வூதியர், விற்பனைத் திணைக்களம்), கனகநாதன் (விற்பனைத் திணைக்கள ஒய்வூதியரும் மட்டுவில் மக்கள் கடை உரிமையாளரும்), ஞானமலர் (சுவிஸ்), ஞானாம்பிகை(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவசுப்பிரமணியம், பொன்னுத்துரை, இராசரத்தினம், சரோஜாமலர் (ஆசிரியை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), நந்தினி, நித்தியானந்தன் (சுவிஸ்). நவரட்ணம் (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும் சிவநேசன் (சுவிஸ்), சிவதீசன், சிவஜீவா, தங்கராசா (லண்டன்), தயாளினி, தயாகரன் (கனடா), தயாபரன், சுதர்ஷன் (ஜேர்மனி), சுதாஜினி, சுதாகரன், சுதர்சினி, திசாந்த், கோபிராஜ், அஜந்தன், சுஜீவன், தனுஜன், நிஷிதன் (சுவிஸ்), கிருபாநந்தினி (சுவிஸ்), கிஷாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22- 09- 99 புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊற்றலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்,

தகவல்:
வே. கனகநாதன்
(மகன்)

கைதடி கிழக்கு,
கைதடி.

([illegible])


## சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிக்க விரைவில் 6500 ஆசிரியர்கள்

### டிசெம்பருக்கு முன் நியமனம்

கொழும்பு, செப். 23

சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிப்பதற்காக இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் 6 ஆயிரத்து 500 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

இசுருபாயாவிலுள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சின் உயரதிகாரிகள் கலந்துகொண்ட இம்மாநாட்டில் வெற்றிடம் மற்றும் தேவை அடிப்படையிலேயே இந்த 6 ஆயிரத்து 500 ஆசிரிய நியமனங்களும் வழங்கப்படும் எனவும் இதற்கெனத் தகுதிகாண் பரீட்சைகள் நடத்தப்படமாட்டாது எனவும் அவர் கூறினார்.

25 வயதுக்குக் கீழ் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதி பெறாமல் இருப்பவர்களுக்கே இந்தநியமனம் வழங்கப்படும்.

இதே நேரம் தமிழ்மொழிப் பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பிப்பதற்கென பிறத்தியேக சிங்கள மொழி ஆசிரிய நியமனங்கள் இடம் பெறாது எனவும்—

தற்போது சேவையில் உள்ள சிங்களமொழி ஆசிரியர்களே தொடர்ந்தும் தமிழ்பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிப்பர் என்றும்—

அவர்களுக்கென சலுகைகளும் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படுமெனவும்— அமைச்சர் தெரிவித்தார்.

6 ஆயிரத்து 500 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவது மட்டுமன்றி 2 ஆயிரம் ஆண்டு பூர்த்தியடைவதற்கு முன்னர் அவர்களுக்கான ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படும் எனவும் அமைச்சர்குறிப்பிட்டார். (ஐ–ரி–9)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய், செப் 23

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் மறுநாள் பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-க-30–154)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவ சப்பறத்திருவிழா இன் வியாழக்கிழமையும் ரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமையும் சமுத்திரதீர்த்தம் நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறும். (இ-173)

★ ★ ★

கொழும்புத்துறை, செப். 23

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை அன்னையின் வருடாந்த திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறும்.

இந்த இரு தினங்களிலும் ஆலயத்திற்கு செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-க-30-167]

## தையல் பயிற்சி

தென்மராட்சி, செப். 23

பளைப் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் சம்மேளனத்தினால் பிரதேசத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கான இலவச தையல். மனைப் பொருளியல் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள இளைஞர் யுவதிகள் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் விண்ணப்பங்களைப் புலோப்பளை வீதியில் உள்ள சம்மேளன அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சம்மேளனத் தலைவர் ச. முரளிதரன் அறிவித்துள்ளார். [ஐ–117]


## பிற்போடப்பட்டுள்ளது

கரவெட்டி மேற்கு சகாதேவன் குடியிருப்பு ஞானவைரவர் ஆலய திருப்பணி நிதி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 14-1-2000 அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

– நிர்வாகம்

(69301)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org